## Sembawang Heritage Trail
**செம்பவாங் மரபுடைமைப் பாதை**

செம்பவாங் மரபுடைமைப் பாதை, சிங்கப்பூரிலுள்ள இடங்களின் வரலாற்று, சமூக நினைவலைகளை ஆவணப்படுத்தி படைக்கும் நோக்கத்துடன் தேசிய மரபுடைமைக் கழகம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் முயற்சியின் ஒரு பகுதியாகும். இவ்வட்டாரத்தில் வேலை செய்தவர்கள், வாழ்ந்தவர்கள், அல்லது விளையாடியவர்களுக்கு இனிமையான அக்கால நினைவுகளை இப்பாதை ஞாபகப்படுத்தும் என்றும், வருகையாளர்களுக்கும் புதிய குடியிருப்பாளர்களுக்கும் பயன்மிக்கத் தகவல் வளமாகப் பயன்படும் என்றும் நம்புகிறோம்.

---

## Former Admiralty House
**முன்னாள் அட்மிரால்டி ஹவுஸ்**

345 Old Nelson Road

345 ஓல்டு நெல்சன் சாலை

முன்னாள் அட்மிரால்டி ஹவுஸ் 1939க்கும் 1940க்கும் இடையில் பிரிட்டிஷ் ராயல் கடற்படையால் கட்டப்பட்டது. முன்னாள் செம்பவாங் கடற்படைத் தளத்தின் ஆக மூத்த அதிகாரியின் இல்லமாக அது கட்டப்பட்டது. ஆரம்பத்தில் அது நேவி ஹவுஸ் அல்லது கேன்பரா ஹவுஸ் (அருகிலுள்ள கேன்பரா சாலையின் பெயரில்) என்றழைக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, கட்டடத்தின் பெயர் நெல்சன் ஹவுஸ் என மாற்றப்பட்டது (பிரபல அட்மிரல் ஹொரேஷியோ நெல்சனின் நினைவாக). நெல்சன் ஹவுஸ் 1958 வரை மலாயாவுக்கான கொடி அதிகாரியின் இல்லமாகப் பயன்பட்டது. அதன்பிறகு, அதன் பெயர் அட்மிரால்டி ஹவுஸ் என மாறியது. இந்தக் கட்டடம் 2002ல் தேசிய நினைவுச்சின்னமாக அறிவிக்கப்பட்டது.

முன்னாள் அட்மிரால்டி ஹவுஸ் கட்டடத்தை வடிவமைத்தவர் யார் என்பது தெரியவில்லை. ஆனால், கட்டடத்தின் சமச்சீரான வடிவமைப்பும், பல்வேறு இயற்கையான மூலப்பொருட்களின் பயன்பாடும், 19ஆம் நூற்றாண்டு கைவினைக்கலை கட்டட வடிவமைப்பு முறையின் தாக்கத்தைக் காட்டுகின்றன. மேல்மாடியில் உள்ள செங்கல் சுவர், கீழ்மாடியின் அரைசாந்து சுவர்களுக்கு நேர்மாறாக வித்தியாசமாகக் காட்சியளிக்கிறது.

மலாயாவின் ரியர் அட்மிரல் எர்னஸ்ட் ஜான் ஸ்பூனரும் அவரது மனைவி மேகன் ஃபாஸ்டரும் 1941ல் சிங்கப்பூருக்கு வந்தனர். அவர்களே இந்த வீட்டின் முதல் குடியிருப்பாளர்கள். 1958க்கும் 1971க்கும் இடையில், செம்பவாங் கடற்படைத் தளத்தில் இருந்த பிரிட்டனின் தூரக்கிழக்கு கடற்படையின் தளபதி வசிக்கும் இல்லமாக அட்மிரால்டி ஹவுஸ் பயன்பட்டது. அதன்பின்னர், 1971 முதல் 1974 வரை, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, யுனைடெட் கிங்டம் ஆகிய நாடுகளின் கூட்டுப்படைத் தளபதி அங்கு வசித்தபோது, கட்டடத்தின் பெயர் ANZUK ஹவுஸ் என மாறியது.

இன்று, புக்கிட் கேன்பரா என்றழைக்கப்படும் ஒருங்கிணைந்த சமூக மையத்தின் ஒரு பகுதியாக இந்தக் கட்டடம் திகழ்கிறது.




முன்னாள் அட்மிரால்டி ஹவுஸ் கட்டடத்தின் முன்தோற்றம், அதன் சமச்சீரான வடிவமைப்பைக் காட்டுகிறது, 1940
*யுனைடெட் கிங்டம் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*




கேன்பரா சாலையிலிருந்து முன்னாள் அட்மிரால்டி ஹவுஸ் கட்டடத்திற்கு இட்டுச்செல்லும் நெல்சன் சாலை (இப்போது ஓல்டு நெல்சன் சாலை), 1940
*யுனைடெட் கிங்டம் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



வீட்டின் முதல் குடியிருப்பாளர்களான ரியர் அட்மிரல் எர்னஸ்ட் ஜான் ஸ்பூனரும் அவரது மனைவி மேகன் ஃபாஸ்டரும், 1941
*மலாயா ட்ரிபியூனின் 2 செப்டம்பர் 1941 பதிப்பிலிருந்து எடுக்கப்பட்ட படம்*

---

## Sembawang Hot Spring
**செம்பவாங் வெந்நீர் ஊற்று**

Gambas Avenue
கம்பாஸ் அவென்யூ

செம்பவாங் வெந்நீர் ஊற்றுதான் சிங்கப்பூரின் பெருநிலத்தில் உள்ள ஒரே இயற்கையான வெந்நீர் ஊற்று. சியா எங் கியோங் எனும் வணிகருக்குச் சொந்தமான சதுப்புநிலத்தில் இந்த வெந்நீர் ஊற்று அமைந்திருந்தது. அவர் ஊற்றின் தண்ணீர் ஆராயப்படும் வரை ஊற்றை இரகசியமாக வைத்திருக்க விரும்பினார். ஆனால், நகராட்சிப் பொறுப்பாளர் வில்லியம் ஆர்தர் பேட்ஸ் 1908ல் ஊற்றைக் காண நேரிட்டபோது, பத்திரிகைகளிடம் தெரியப்படுத்திவிட்டார்.

1909ல், தாதுப்பொருள் நிறைந்த ஊற்றுநீரை போத்தல்களில் அடைந்து, “சொம்புன்” என்ற வர்த்தகப் பெயரில் விற்கத் தொடங்கினார் சியா. பிற்பாடு, உள்ளூர் பானத் தயாரிப்பு நிறுவனமான ஃபிரேசர் அண்ட் நீவ் (F&N), 1921ல் ஊற்றுக்குப் பொறுப்பேற்றுக்கொண்டு, “சொம்”, “சிங்கா நீர்” போன்ற வர்த்தகப் பெயர்களில் ஊற்றுநீரை விற்பனை செய்தது.

இரண்டாம் உலகப் போரின்போது, ஜப்பானியர்கள் இப்பகுதியை வெந்நீர் குளியல் பகுதியாக மாற்றினார்கள். ஆனால், 1944ல் அங்கு வெடிகுண்டு விழுந்தபோது, நீரோட்டம் தடைப்பட்டது. அதன் விளைவாக, பல ஆண்டுகளுக்கு போத்தல்களில் அடைக்கும் அளவுக்குப் போதிய அளவு தண்ணீரை ஊற்று உற்பத்தி செய்யவில்லை. அதற்குப் பதிலாக, அங்கு சதுப்புநிலக் குளங்கள் உருவாகின. அருகாமையில் வசித்த மக்கள் குளிப்பதற்கு, துணி துவைப்பதற்கு அல்லது முட்டை வேக வைப்பதற்கு வெந்நீரைப் பயன்படுத்தினார்கள்.

ஊற்றின் நீரோட்டம் வழக்கநிலைக்குத் திரும்பிய பிறகு, F&N நிறுவனம் செமாங்காட் ஆயர் என்ற பெயரிலான தொழிற்சாலையை அருகாமையில் கட்டியது. 1967ல் திறக்கப்பட்ட அந்தத் தொழிற்சாலை, “சிலேத்தாரிஸ்” என்ற பெயரில் ஊற்றுநீரைப் போத்தல்களில் அடைத்து விற்பனை செய்தது. அரசாங்கம் செம்பவாங் விமானத்தளத்தை விரிவுபடுத்துவதற்காக 1985ல் அப்பகுதியைப் பற்றுமானம் செய்த பிறகு தொழிற்சாலை மூடப்பட்டது.

ஆனால், வெந்நீர் ஊற்றின் அறிவியல், வரலாற்று மதிப்பைப் பாதுகாக்கும்படி சமூகத்தினர் கோரிக்கைகள் செய்ததைத் தொடர்ந்து, அரசாங்கம் ஊற்றைப் பொதுமக்களுக்குத் திறந்து விட்டிருந்தது. அண்மையில் அப்பகுதி செம்பவாங் வெந்நீர் ஊற்றுப் பூங்காவாகச் சீரமைக்கப்பட்டு, 2020 ஜனவரியில் திறக்கப்பட்டது.



வெந்நீர் ஊற்றுத் திடலில் இருந்த கிணற்றருகில் சிறுவர்கள், 1947
*ரிச்சர்ட் ஹேலுக்கு நன்றி*



செமாங்காட் ஆயர் என்றறியப்பட்ட ஃபிரேசர் அண்ட் நீவ் போத்தல்நீர் தொழிற்சாலை, 1967
*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



2014ல் வெந்நீர் ஊற்று
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*

---

**Masjid Petempatan Melayu Sembawang**
**மஸ்ஜித் பெடம்படன் மலாயு செம்பவாங்**
27B Jalan Mempurong
27B ஜாலான் மெம்புரொங்

மஸ்ஜித் பெடம்படன் மலாயு செம்பவாங் பள்ளிவாசல் 1963ல் திறக்கப்பட்டது. செம்பவாங்கின் இந்த மூலையில் 1980கள் வரை அமைந்திருந்த கம்போங் தெங்கா கிராமத்தின் குடியிருப்பாளர்கள் இதனைக் கட்டினார்கள். அருகிலிருந்த கம்போங் வாக் ஹசான், கம்போங் தஞ்சோங் இராவ் போன்ற மற்ற கிராமங்களிலிருந்த முஸ்லிம் சமூகத்தினரும் இந்தப் பள்ளிவாசலைப் பயன்படுத்தினார்கள்.

பள்ளிவாசல் சமூக முயற்சியின் பலனாகக் கட்டப்பட்டது. இப்பகுதியில் வாழ்ந்துவந்த ஒவ்வொரு குடும்பமும் மாதந்தோறும் ஒரு சிறு தொகையை நன்கொடையாக வழங்கின. அதன்வழி, கட்டுமானப் பொருட்களை வாங்குவதற்கு நிதி சேகரிக்கப்பட்டது. உள்ளூர் இளையர்கள் கிராமங்களிலிருந்த வீடுகளில் *மர்ஹபான்* மற்றும் *பெர்சான்ஜி* (நபிகளைப் போற்றும் பாடல்கள்) படைத்து நிதி திரட்ட உதவினார்கள். லீ அறநிறுவனமும் $10,000 நன்கொடை வழங்கியது.

சிங்கப்பூரில் பாரம்பரிய மலாய் பள்ளிவாசல் வடிவமைப்பின் எடுத்துக்காட்டாக இந்தக் கட்டடம் இன்றுவரை நிலைத்திருக்கிறது. பாரம்பரிய வடிவமைப்பின் அம்சங்களைத் தொழுகை மண்டபத்தில் காணலாம். மண்டபத்தைத் தாங்க, *தியாங் செரி* எனும் செதுக்கப்பட்ட மரத்தூண் மையப்பகுதியில் அமைந்துள்ளது. வாசலில், *கெந்தோங்* அல்லது

மரத்திலான பிளவு முரசு இருக்கிறது. தொழுகை நேர அழைப்பாக முரசு கொட்டுவது வழக்கம்.

பள்ளிவாசல் கட்டடத்திற்குப் பக்கத்தில் ஒரு பெரிய ரப்பர் மரம் இருக்கிறது. இந்த மரத்தின் வயது குறைந்தது ஒரு நூற்றாண்டு என நம்பப்படுகிறது. இதுவே சிங்கப்பூரின் ஆகப் பழைய ரப்பர் மரமாக இருக்கக்கூடும். இந்தப் பள்ளிவாசல், இன்றுவரை செம்பவாங்கில் வசிக்கும் முஸ்லிம் சமூகத்தின் முக்கியமான சமய, சமூக இடமாக விளங்கி வருகிறது.



மஸ்ஜித் பெடம்படன் மலாயு செம்பவாங், 1986
*சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



பள்ளிவாசலில் நடைபெற்ற _ஹத்ரா_ (கை முரசு) நிகழ்ச்சி, 1966
*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



மஸ்ஜித் பெடம்படன் மலாயு செம்பவாங் பள்ளிவாசலின் மையப்பகுதியில் அமைந்துள்ள *தியாங் செரி*, 2021
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*

## Masjid Assyafaah
**மஸ்ஜித் அஸ்யஃபா**

1 Admiralty Lane
1 அட்மிரால்டி லேன்

9 ஏப்ரல் 2004 அன்று திறக்கப்பட்ட மஸ்ஜித் அஸ்யஃபா பள்ளிவாசல், செம்பவாங்கிலும் வடக்கிலுள்ள சுற்றுவட்டாரங்களிலும் வசிக்கும் முஸ்லிம்களுக்கான வழிபாட்டுத் தலமாகவும் சமூக இடமாகவும் விளங்குகிறது. "அஸ்யஃபா" என்ற பெயர், "இறைவனிடம் வேண்டுதல்" என்ற அர்த்தம் கொண்ட *ஷஃபா'ஆ* என்ற அரபுச் சொல்லிலிருந்து வந்தது.

மஸ்ஜித் அஸ்யஃபா கட்டப்படுவதற்குமுன், இப்பகுதியில் வாழும் முஸ்லிம்கள் செம்பவாங் சாலைக்கு அப்பால் அமைந்திருந்த மஸ்ஜித் ஜூமா செம்பவாங்கில் தொழுதனர். இந்திய முஸ்லிம்கள் 1920களில் கட்டிய அந்தப் பள்ளிவாசல், 1995ல் இடிக்கப்பட்டது. இப்பகுதியில் மஸ்ஜித் நேவல் பேஸ் எனும் மற்றொரு பள்ளிவாசலும் இருந்தது. முன்னாள் செம்பவாங் கடற்படைத் தளத்தின் முஸ்லிம் ஊழியர்கள் 1968ல் அந்தப் பள்ளிவாசலைக் கட்டினார்கள். மஸ்ஜித் நேவல் பேஸ் 2000களின் துவக்கத்தில் இடிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மஸ்ஜித் அஸ்யஃபா கட்டப்பட்டது. செம்பவாங்கில் அதிகரித்துவந்த முஸ்லிம் சமூகத்திற்காக இந்தப் பள்ளிவாசல் கட்டித் தரப்பட்டது.


ஃபாரம் ஆர்கிடெக்ட்ஸ் கட்டட வடிவமைப்பு நிறுவனத்தைச் சேர்ந்த டான் கொக் ஹியாங் வடிவமைத்த மஸ்ஜித் அஸ்யஃபா, இஸ்லாமியச் சின்னங்களை நவீன கட்டடக்கலையுடன் ஒருங்கிணைக்கும் தனித்துவமான பள்ளிவாசலாகக் காட்சியளிக்கிறது. இந்த நான்கு மாடி கட்டடத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி தொழுகை அறைகள் உள்ளன. அதோடு, வகுப்பறைகளும், 4,000 பக்தர்கள் வரை ஒன்றுகூடக்கூடிய பன்னோக்கு மண்டபமும் உள்ளன.

பாரம்பரிய தூபிக்குப் பதிலாக, இந்தப் பள்ளிவாசலில் 33 மீட்டர் உயரமான எஃகு கோபுரம் உள்ளது. அதன் உச்சியில் நட்சத்திரமும் பிறை நிலாவும் உள்ளன. பள்ளிவாசலின் உள்ளே, கூரையின்வழி புகும் இயற்கையான ஒளியுடன் தொழுகை அறைகள் பிரகாசமாக இருக்கின்றன. அவ்வறைகளில் செழிப்பான அரபுபாணி வடிவங்களைக் கொண்ட (இஸ்லாமியக் கலை வடிவம்) திரைகள் உள்ளன. இந்த அலங்காரத் திரைகள், தொழுகை மண்டபத்திற்கு இயற்கையான காற்றோட்டம் அளிக்கின்றன.

தொழுகைக்கும் சமயக் கல்விக்கும் இடம் வழங்குவதோடு, பற்பல நிகழ்ச்சிகள், நடவடிக்கைகள் மூலம் செம்பவாங்கின் பரந்த சமூகத்திற்கும் மஸ்ஜித் அஸ்யஃபா சேவை செய்கிறது. வருடாந்தர குடும்ப விழா, வசதி குறைவான குடும்பங்களுக்கு உணவு விநியோகம் போன்றவை அவற்றுள் அடங்கும்.



கேன்பரா சாலை, முன்னாள் டெல்லி சாலை சந்திப்பில் அமைந்திருந்த முன்னாள் மஸ்ஜித் நேவல் பேஸ், 1986
*லோ குவா ஃபொங்குக்கு நன்றி*



மஸ்ஜித் அஸ்யஃபா பள்ளிவாசலின் உள்ளே இருக்கும் பிரதான தொழுகை மண்டபம், 2021
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*



மஸ்ஜித் அஸ்யஃபா பள்ளிவாசலில் மாதாந்தர சமய உரையின் (*ஸ்யாராஹான் புலானான்)* பங்கேற்பாளர்கள், 2014
*மஸ்ஜித் அஸ்யஃபாவுக்கு நன்றி*

---

## Holy Tree Sri Balasubramaniar Temple
**புனித மரம் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில்**

10 Yishun Industrial Park
10 யீஷூன் தொழிலியல் பேட்டை

புனித மரம் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில், கேன்பரா சாலைக்கு அருகில் ஒரு சிறிய சந்நிதியாக 1962ல் தொடங்கப்பட்டது. பின்னர், முன்னாள் செம்பவாங் கடற்படைத் தளத்தைச் சேர்ந்த இந்து சமூகத்தினரின் சமய, சமூக இடமாகக் கோவில் உருவெடுத்தது. தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்களும் கேரளாவைச் சேர்ந்த மலையாளிகளும் அந்தச் சமூகத்தில் அங்கம் வகித்தனர்.

கப்பல் பட்டறை ஊழியரான P. கருப்பையா, இலந்தை மரத்தடியில் இந்துக் கடவுள் முருகப் பெருமானும் பொன்னிற நல்லபாம்புப் இருப்பதாக 1962ல் கனவு கண்டார். பின்னர், கனவில் கண்ட மரத்தை கேன்பரா சாலைக்கு அருகில் பார்த்தபோது, அதனடியில் சந்நிதி அமைத்தார். கப்பல் பட்டறையின் இந்து ஊழியர்கள் அந்தச் சந்நிதியில் வழிபடத் தொடங்கினார்கள். பிற்பாடு, சந்நிதிக்காக மரத்திலான கூடாரமும் கட்டினார்கள்.

1964ல், அந்தச் சந்நிதி “புனித மரம் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவிலாகப்” பதிவு செய்யப்பட்டது. புனிதமான மரத்தடியில் தொடங்கிய முருகப் பெருமான் வழிபாடு என்பதை இப்பெயர்

குறிக்கிறது. பக்தர்கள் பிற்பாடு நிதி திரட்டி முறையான கோவிலைக் கட்டினார்கள். அந்தக் கோவிலின் குடமுழுக்கு விழா 1971 மார்ச் மாதம் நடந்தேறியது. கேன்பரா சாலை மறுமேம்பாட்டுக்கு உள்ளானபோது, 1996ல் இன்றைய இடத்திற்கு கோவில் இடம் மாறிச்சென்றது. பின்னர், கோவில் சீரமைத்து கட்டப்பட்டு, இப்போதைய கட்டடத்தின் குடமுழுக்கு விழா 2018ல் நடந்தேறியது.

இன்று, செம்பவாங்கிலும் யீஷூனிலும் உள்ள இந்து மக்களுக்கு புனித மரம் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில் தொடர்ந்து சேவையாற்றி வருகிறது. முருகப் பெருமானுக்கும் தெய்வானைக்கும் திருமணமான நாளை முன்னிட்டு, ஆண்டுதோறும் பங்குனி உத்திரத் திருவிழா இங்கு பிரம்மாண்டமாக நடைபெறுகிறது. தேர், காவடி ஊர்வலங்களில் பக்தர்கள் பலர் பங்கெடுப்பார்கள்.



முன்பு கேன்பரா சாலையில் அமைந்திருந்த புனித மரம் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில், 1993

*லோ குவா ஃபொங்குக்கு நன்றி*



கோவில் ஏற்பாடு செய்யும் வருடாந்தர பங்குனி உத்திரத் திருவிழாவில் காவடி ஊர்வலத்தில் பங்குபெறும் பக்தர்கள், 1990

*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*

---

**Beaulieu House**

**பியூலியூ ஹவுஸ்**

117 Beaulieu Road

117 பியூலியூ சாலை

1910களில் கட்டப்பட்ட பியூலியூ ஹவுஸ், யூதத் தொழிலதிபர் ஜோசப் புரூக் டேவிட் என்பவரின் விடுமுறைக்கால இல்லமாக இருந்தது. *பியூலியூ* என்றால் பிரெஞ்சு மொழியில்

“அழகிய இடம்” என்று அர்த்தம். இந்த வீட்டின் நேர்த்தியான வடிவமைப்பாலும், கண்கவர் சூழலாலும் இந்தப் பெயர் சூட்டப்பட்டிருக்கலாம்.

பியூலியூ ஹவுஸ் “நியோகிளாசிக்” எனும் புதுவித தொண்மை பாணியில் கட்டப்பட்டது. கட்டடத்தின் எழில்மிகு அலங்கரிப்புகளும் அரைசாந்து வடிவங்களும் இதற்குச் சான்று. கூரையில் வார்ப்பிரும்பிலான அலங்கார கட்டைச்சுவருடன் பிரதானமான உள்முற்றம் அமைந்துள்ளது. அதேபோன்ற வார்ப்பிரும்பிலான கம்பித்தடுப்புகளை முன் முகப்பிலும் காணலாம். ஒளியைப் பிரதிபலிக்கக்கூடிய டெராசோ களிமண் தரைக்கற்கள் முன் முகப்பில் பதிக்கப்பட்டுள்ளன. உள்ளே, பிரதான மண்டபத்தில் வடிவியல் வடிவங்கள் கொண்ட சூட்டுவண்ணத் தரைக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

1920களில், காலனித்துவ அரசாங்கம் பியூலியூ ஹவுஸை பற்றுமானம் செய்தது. செம்பவாங் கடற்படைத் தளத்தின் முன்னோட்டப் பணிகளை மேற்பார்வையிட்ட சூப்பரின்டன்ட் சிவில் பொறியாளர் சி. ஹெச். கோல் அங்கு தங்கியிருந்தார். பின்னர், 1941 முதல் 1942 வரை, பிரிட்டனின் கிழக்கத்திய கடற்படையின் தளபதி வைஸ்-அட்மிரல் சர் ஜா்ஃப்ரி லேட்டன் அவ்வீட்டில் தங்கியிருந்தார்.

போருக்குப் பிறகு, பியூலியூ ஹவுஸில் மூத்த கடற்படை அதிகாரிகள் தங்கினார்கள். பிரிட்டனின் தூரக்கிழக்கு கடற்படையின் தலைவர் ரியர்-அட்மிரல் பிரான்சிஸ் பிராயன் பிரைஸ் பிரேன்-நிக்கல்ஸ் போன்ற அதிகாரிகள் அதில் உள்ளடங்கினர். அவர், வீட்டுக்கு அடியிலிருந்த பியூலியூ அணைகரையிலிருந்தபடி, சிங்கப்பூரை வந்தடைந்த கப்பல்களைத் தலைவணங்குவார். பிரிட்டிஷ் படைகள் 1971ல் சிங்கப்பூரிலிருந்து வெளியேறிய பிறகு, பியூலியூ ஹவுஸின் சுற்றுவட்டாரம் சீரமைக்கப்பட்டு, 1979ல் செம்பவாங் பூங்காவாகத் திறக்கப்பட்டது.

1981 முதல், பியூலியூ ஹவுஸ் ஓர் உணவகமாகப் பயன்பட்டு வருகிறது. 2005ல், இந்தக் கட்டடம் பழமை பாதுகாப்புக் கட்டடமாகத் தகுதி பெற்றது.



நீச்சல் *பகாருடன்* (மலாய் மொழியில் “வேலி” என்று அர்த்தம்) பியூலியூ ஹவுஸின் தோற்றம், 1920கள்
*யுனைடெட் கிங்டம் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



பியூலியூ ஹவுஸ், 1920கள்
*யுனைடெட் கிங்டம் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



கடற்படை அதிகாரிகள் பியூலியூ அணைகரையில் ஹெச்எம்எஸ் அல்பியோன் விமானந்தாங்கி கப்பலுக்குத் தலைவணங்குகின்றனர், 1965
*கிளைவ் மெனரிக்கு நன்றி*

---

## Sembawang Strip
**செம்பவாங் ஸ்ட்ரிப்**

1018-1036 Sembawang Road

1018-1036 செம்பவாங் சாலை

1965 வாக்கில் கட்டப்பட்ட இந்தக் கடைவீடுகளின் வரிசை, செம்பவாங் ஸ்ட்ரிப் எனப் பிரபலமாக அறியப்பட்டது. செம்பவாங் சாலையின் இந்தப் பகுதியில் அமைந்திருந்த முன்னாள் செம்பவாங் வில்லேஜ் குடியேற்றத்தின் ஒரு பகுதியாக இது இருந்தது. இது, செம்பவாங் சாலையின் 14ஆம் மைல்கல் என்றும் அறியப்பட்டது.

செம்பவாங் வில்லேஜ் 1920களில் அமைக்கப்பட்டது. அங்கு வாழ்ந்து வந்தவர்களில் பலரும், முன்னாள் செம்பவாங் கடற்படைத் தளத்தின் ஊழியர்களுக்கும் குடியிருப்பாளர்களும் உணவும் மற்ற பொருட்களும் விற்பனை செய்து சம்பாதித்தனர். செம்பவாங் வில்லேஜில், நகர்ப்பகுதி வரை பயணம் செல்லக்கூடிய டாக்சிகளும் பேருந்து சேவையும் கூட இருந்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, செம்பவாங் வில்லேஜில் 20க்கும் மேலான மதுபானக் கடைகள் திறக்கப்பட்டன. கடற்படைத் தளத்தில் அமைந்திருந்த ஹெச்எம்எஸ் டேரர் (இன்றைய செம்பவாங் முகாம்) எனும் பாளையங்களில் தங்கியிருந்த கடலோடிகளுக்கு இந்தக் கடைகள் சேவை வழங்கின. செம்பவாங் ஸ்ட்ரிப்பில் இருந்த நெல்சன் பார், ஓஷன் பார் போன்ற மதுபானக் கடைகளுக்குக் கடலோடிகள் செல்வது வழக்கம். கடைகளுக்குப்

பக்கத்தில், செம்பவாங் பேட்டியோ என்றழைக்கப்பட்ட வெளிப்புற உணவகத்திற்கும் கடலோடிகள் அடிக்கடி சென்றனர். ரொட்டி ஜான் (நீளமான சாண்ட்விச்) *சூப் துலாங் மேரா* (சிவப்புநிற ஆட்டெலும்பு சூப்) போன்ற உணவு வகைகள் அங்கு பிரபலமாக இருந்தன.

பிரிட்டிஷார் சிங்கப்பூரிலிருந்த தங்களது ராணுவப் படைகளை மீட்டுக்கொண்ட பிறகு, 1970களின் பிற்பகுதியில் மதுபானக் கடைகள் குறையத் தொடங்கின. 1987ல், இந்தக் கடைவீடுகள் தவிர, செம்பவாங் வில்லேஜின் பெரும்பகுதி இடிக்கப்பட்டது. இன்று, இப்பகுதியின் கடற்படை வரலாற்றின் நினைவூட்டலாக செம்பவாங் ஸ்ட்ரிப் மட்டும் நீடித்திருக்கிறது. இங்குள்ள கடைகளும் உணவகங்களும் அருகிலுள்ள சுற்றுவட்டாரங்களில் வசிக்கும் மக்களிடையில் தொடர்ந்து பிரபலமாக இருந்து வருகின்றன.



செம்பவாங் ஸ்ட்ரிப், 1960கள்
*சோஃபியா அப்துல் ரஹ்மான் மற்றும் டோனி டாயருக்கு நன்றி*



செம்பவாங் பேட்டியோ, 1967
*டேவிட் ஏயர்ஸ்-க்கு நன்றி*




முன்னாள் செம்பவாங் வில்லேஜில் இருந்த கடைகளும் மதுபானக் கடைகளும், 1967
*டேவிட் ஏயர்ஸ்-க்கு நன்றி*

## Homes in the Naval Base
**கடற்படைத் தளத்திலிருந்த வீடுகள்**

Admiralty Road East

அட்மிரால்டி சாலை ஈஸ்ட்

அட்மிரால்டி சாலை ஈஸ்ட் 1923ல் கட்டப்பட்டது. அங்கு காலனித்துவ காலத்து வீடுகள் பல உள்ளன. அந்த வீடுகள், முன்னாள் செம்பவாங் கடற்படைத் தளத்தின் பிரிட்டிஷ் அதிகாரிகளின் குடியிருப்பாக 1920களிலும் 1930களிலும் கட்டப்பட்டன.

1938ல் திறக்கப்பட்ட செம்பவாங் கடற்படைத் தளம், 1920களிலும் 1930களிலும் பிரிட்டிஷாரால் கட்டப்பட்டது. போர்க் கப்பல்களில் எரிபொருள் ஏற்றவும் கப்பல்களைப் பழுதுபார்க்கவும் அங்கு ஒரு கப்பல் பட்டறை இருந்தது. ஹெச்எம்எஸ் டேரர் எனப்படும் அதன் பாளையத்தில், வருகையளிக்கும் கடலோடிகள் தங்கியிருந்தனர். அது இப்போது செம்பவாங் முகாமாக இருக்கிறது. கடற்படைத் தளத்தின் கப்பல் பட்டறை, பிரிட்டன் அதன் ராணுவப் படைகளை 1971லிருந்து மீட்டுக்கொள்ளத் தொடங்குவதற்கு முன்பாக, 1968ல் செம்பவாங் கப்பல் பட்டறையாக (இன்றைய செம்ப்கார்ப் மரீன் அட்மிரால்டி பட்டறை) மாற்றப்பட்டது. கடைசி பிரிட்டிஷ் போர்க்கப்பல் 1975ல் சிங்கப்பூரிலிருந்து வெளியேறியது.

முன்னாள் கடற்படைத் தளத்திலிருந்த வீடுகள் பல்வேறு அளவுகளில் பல்வேறு வடிவங்களைக் கொண்டிருந்தன. அவற்றில் பெரும்பாலானவை கறுப்பு, வெள்ளை பங்களாக்கள். 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அந்த பாணி சிங்கப்பூரில் பிரபலமாக இருந்தது. கடற்படைத் தளத்தைக் கட்டிய சர் ஜான் ஜாக்சன் லிமிடெட் பிரிட்டிஷ் நிறுவனத்தின் பொறியாளர்களுக்காக 1929ல் ஜிப்ரால்டர் கிரசன்ட்டில் கட்டப்பட்ட பங்களாக்களும் அவற்றுள் அடங்கும்.

இப்பகுதியிலுள்ள ஆகப்பெரிய கறுப்பு, வெள்ளை வீடுகள் 1930களில் கட்டப்பட்டன. கப்பல் பட்டறையின் கேப்டன், தலைமை பொறியாளர் போன்ற உச்ச அதிகாரிகள் அவற்றில் தங்கினர். மேற்பார்வையாளர்கள் போன்ற மற்ற பணியாளர்களுக்காகச் சிறிய வீடுகள் கட்டப்பட்டன. இந்தச் சிறிய வீடுகளின் வெளிப்புறத்தில் காணப்படும் செங்கல் மேற்பரப்பு, கைவினைக்கலை கட்டட வடிவமைப்பு இயக்கத்தின் தாக்கத்தைக் காட்டுகிறது.

**தயவுசெய்து கவனத்தில் கொள்க!**

இப்பகுதியில் உள்ள வீடுகள் தனியாருக்குச் சொந்தமானவை. தயவுசெய்து குடியிருப்பாளர்களை மதித்து, சத்தத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். வீடுகளுக்குள் அல்லது வளாகத்திற்குள் நுழையாதீர்கள். **தயவுசெய்து வீடுகளையும் அவற்றில் வசிப்பவர்களையும் புகைப்படமும் காணொளியும் எடுக்காதீர்கள்.**



தலைமை அதிகாரி ஒருவரின் இந்த வீடு, கடற்படைத் தளத்திலிருந்த பெரிய வீடுகளில் ஒன்றாகும், 1930

*யுனைடெட் கிங்டம் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



கைவினைக்கலை கட்டட வடிவமைப்பு இயக்கத்தின் தாக்கத்தை வெளிப்படுத்தும் மேற்பார்வையாளர்களின் வீடுகள், 1929

*யுனைடெட் கிங்டம் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



ஜிப்ரால்டர் கிரசன்ட்டில் உள்ள தனித்துவமான ஒரு கட்டடம் ஜப்பானிய தியேட்டர் அல்லது கப்பல் பட்டறை தியேட்டர். இது, ஜப்பானியர் ஆக்கிரமிப்பின்போது கட்டப்பட்டது. பிற்பாடு, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, இங்கு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன, 2021

*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*

## Sembawang Shipyard
**செம்பவாங் கப்பல் பட்டறை**
60 Admiralty Road West
60 அட்மிரால்டி ரோடு வெஸ்ட்

தூரக் கிழக்கில் தங்களது கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசங்களைத் தற்காப்பதற்காக பிரிட்டிஷார் கட்டிய செம்பவாங் கடற்படைத் தளம் 1938ல் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நுழைவாயில், ஒரு காலத்தில் போர்க் கப்பல்களில் எரிபொருள் ஏற்றி, கப்பல்கள் பழுதுபார்க்கப்பட்ட கடற்படைத் தளத்தின் கப்பல் பட்டறைக்கு இட்டுச்சென்றது.

கப்பல் பட்டறையின் 305 மீட்டர் நீளமான “கிங் ஜார்ஜ் VI ட்ரை டாக்” அதன் மையமாகத் திகழ்ந்தது. இது 1938ல் திறக்கப்பட்டபோது, உலகின் ஆகப்பெரிய உலர்வகை கப்பல் பழுதுபார்ப்பு மேடையாக இருந்தது. மற்றொரு வரலாற்று நினைவுச்சின்னம் முன்னாள் செம்பவாங் தீயணைப்பு நிலையம். “Art-Deco” கலையெழில் பாணியிலான இந்த நவீனக் கட்டடத்தில், தீயணைப்புக் குழாய்களைக் காய வைப்பதற்கான நேர்த்தியான கோபுரம் அமைந்துள்ளது. தீயணைப்பு நிலையம் 2005ல் மூடப்பட்டு, 2007ல் பழமைப் பாதுகாப்பு கட்டடமாக அறிவிக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகும் கப்பல் பட்டறை தொடர்ந்து சுறுசுறுப்பாக இயங்கி வந்தது. ஏனெனில், 1950கள் முதல் 1960கள் வரை நிலவிய மலாயா நெருக்கடிநிலை, கொன்ஃபிரன்டாசி காலகட்டங்களில் பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் இவ்வட்டாரத்தில் பயன்படுத்தப்பட்டன. 1968ல், கப்பல் பட்டறையின் உரிமையை பிரிட்டன் சிங்கப்பூரிடம் ஒப்படைத்தது. சிங்கப்பூர் அதனை செம்பவாங் கப்பல் பட்டறையாக மாற்றியது (2015ல் செம்ப்கார்ப் மரீன் அட்மிரால்டி பட்டறை எனப் பெயர் மாற்றப்பட்டது).

இன்று, சிங்கப்பூரின் கடல்துறையில் கப்பல் பட்டறை தொடர்ந்து முக்கிய அங்கம் வகிக்கிறது. “கிங் ஜார்ஜ் VI ட்ரை டாக்”, போருக்கு முந்திய பட்டறை கட்டடங்கள் ஆகியன, இன்றுவரை தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. கப்பல் பட்டறையில் சமய வழிபாட்டுத் தலங்களும் உள்ளன. முஸ்லிம் ஊழியர்களுக்கான *சுராவ்* (தொழுகை மண்டபம்), 1970களில் புனித மரத்தடியில் நிறுவப்பட்ட ஸ்ரீ மதுரை வீரன் காளியம்மன் கோவில் சந்நிதி ஆகியன அவற்றுள் அடங்கும்.



கடற்படைத் தளத்தின் அதிகாரபூர்வ திறப்பு விழாவில் விருந்தினர்கள், 1939
*எட்வின் ஏ. பிரவுன் திரட்டிலிருந்து பெறப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை, சீலியா மேரி ஃபர்குசன் மற்றும் சிங்கப்பூர் தேசிய நூலக வாரியம், 2008.*



செம்பவாங் கப்பல் பட்டறை, 1971
*தகவல், கலைகள் அமைச்சின் திரட்டு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு நன்றி*



செம்ப்கார்ப் மரீன் அட்மிரால்டி பட்டறையிலுள்ள போருக்கு முந்திய காலத்து கட்டடங்கள், 2021
*தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி*